# இந்திய கல்விசார் ஆய்வாளர்கள் அமைப்பு

# INDIAN ACADEMIC RESEARCHERS ASSOCIATION

(An ISO Certified Association Registered under Trust Act & NGO DARPAN
(TN/2021/0298313) and MSME Udyam Reg. No. UDYAM-TN-27-0040698)
திருச்சிராப்பள்ளி - தமிழ்நாடு - இந்தியா
www.iaraindia.com / Email: editor@iaraindia.com

## ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி இணைந்து நடத்தும்

# தமிழ் இலக்கியங்களில் சமூகநீதி கோட்பாடுகள்

## பன்னாட்டு கருத்தரங்கம் மற்றும்

# தமிழாய்வுச் சங்கமம் விருது வழங்கும் விழா

**நாள்: 23 டிசம்பர் 2023** | **இடம் : சென்னை**

உலக மொழிகளிலே தமிழ் மொழி தனக்கென தனிச்சிறப்பும், தகுதியும் உடைய மொழியாகும். இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்தும் தன்னுடைய மொழி வளத்தால் வெற்றி நடைபோட்டு வருகிறது. செம்மொழித்தகுதி பெற்ற மொழிகளிலேயே தமிழ் மொழி மட்டுமே தனித்த அடையாளத்துடன் உலகம் முழுவதும் 10 கோடிக்கும் அதிகமான மக்களால் இன்றும் பேசப்பட்டுவருகிறது. உலகில் முதன்மை மொழியாகவும், இலக்கிய இலக்கண வளங்கள் நிறைந்த மொழியாகவும் விளங்கிவரும் தமிழ்மொழியில் அறிவியல் சிந்தனைகளும். தொழிலுநுட்பக் கோட்பாடுகளும், நவீன காலத்திற்கு ஏற்றவாறு நிரம்பிக் காணப்படுவதைக் காலந்தோறும் எழுந்த தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் உணர்த்துகின்றன.தமிழ் இலக்கியங்கள் தொன்மையானதும், இலக்கண செழுமை நிறைந்ததும் மட்டுமல்லாது இச்சமுகத்திற்கு தேவையான சமூக நீதி கோட்பாடுகளையும், மனிதநேய சிந்தனைகளையும் விதைக்கின்ற மிகப்பெரிய பணியை செய்துள்ளது. அந்த வகையில் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் சமூகநீதி கோட்பாடுகளை சமகால ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும் எடுத்துரைக்கவும், அதிலிருக்கும் சிந்தனைகளும், விளக்கங்களும் எவ்வாறு இன்றளவும் பயன்படுத்தப்படுகிறது என்பதை தெரிந்து கொள்வதற்கும் இந்த கருத்தரங்கம் வாய்ப்பாக அமையும் என்பதை உணர்ந்து இத்தகைய தலைப்பை இந்திய கல்வி சார்ந்த ஆய்வாளர் அமைப்பு இந்த ஆண்டுக்கான தமழாய்வுச் சங்கம் பன்னாட்டு கருத்தரங்கின் கருப்பொருளாக கொண்டுள்ளது. இக்கருத்தரங்கில் கல்வியாளர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணாக்கர்கள் மற்றும் அறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் கலந்து கொள்ளலாம்.

### கட்டுரைகள் சமர்ப்பித்தல் :

- ★ கருத்தரங்கிற்கு கட்டுரைகள் வழங்கவோர் பின் வரும் விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.
- ★ கருத்தரங்க தலைப்பு சார்ந்த தலைப்புகளில் ஆய்வுக்கட்டுரைகள் இருத்தல் வேண்டும்.
- ★ ஆய்வுக்கட்டுரைகள் 6-8 பக்கங்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.
- ★ ஆய்வுக்கட்டுரைகளைப் பாமினி எழுத்துருவில் தட்டச்சு செய்து மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்க வேண்டும்.
- ★ ஆய்வுக் கட்டுரைகளை அனுப்புபவர் தங்களது பெயர், பதவி கல்வி நிலைய முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி போன்றவற்றை முதல் பக்கத்தில் தலைப்புக்குக் கீழ் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

### பதிவு கட்டணம்:

கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் ஆய்வுக் கட்டுரை சமர்பிப்பவர்களுக்கும் கருத்தரங்க அன்பளிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். பதிவுக்கட்டணம் ரூ 250/- கருத்தரங்கிற்காகப் பெறப்படும் கட்டுரைகள் தேர்வு செய்யப்பட்டு தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழில் வெளியிடப்படும். பதிவுக்கட்டணம் ரூ.500/- கட்டுரை அனுப்ப கடைசி நாள் 05-12-2023

## தமிழாய்வுச் சங்கமம் விருது 2023

தமிழ் இலக்கணம், இலக்கியம் நாட்டுப்புறவியல் உள்ளிட்ட துறைகளில் சிறந்து விளங்கம் கல்வியாளர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் கீழக்கண்ட விருதுகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

- ★ **அகத்தியர் இலக்கண விருது**
- ★ **வானமாமலையார் நாட்டுப்புறவியல் விருது**
- ★ **தேவநேய பாவணர் ஆய்வு நெறியாளர் விருது**
- ★ **திருவள்ளுவர் இலக்கிய விருது**
- ★ **ஔவையார் பெண்ணிய விருது**
- ★ **இராதா கிருஷ்ணன் நல்லாசிரியர் விருது**
- ★ **பாரதியார் கவிதை விருது**
- ★ **பரிதிமாற்கலைஞர் ஆய்வாளர் விருது**

### வாழ்நாள் சாதனையாளர் விருது :

தமிழ் இலக்கணம், இலக்கியம், பண்பாடு, ஆய்வுகள், நூல் வெளியிடுதல் உள்ளிட்ட பிரிவுகளில் சிறப்பாகப் பணியாற்றி வரும் 50 வயதிற்கு மேற்பட்ட தமிழறிஞர்கள் ஆய்வாளர்களுக்கு மற்றும் தமிழ் ஆர்வலர்களுக்கும் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படும்.

### விண்ணப்பிக்கும் முறை :

மேற்கண்ட விருதுகளுக்கு விண்ணப்பிக்க விரும்புகின்றவர்கள் விண்ணப்ப்ப படிவத்தினைப பூர்த்தி செய்து அனுப்பு வேண்டும்.
https://docs.google.com/forms/d/15A4jIT1GIBqfO9wMwBU4dKTy-1qazWPRtd-nJyz70eE/edit

### தேர்வு செய்யும் முறை :

மேற்கண்ட விண்ணப்பதாரர்களின் தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் விருதுகள் வழங்கப்படும். விருது கேடயம், சான்றிதழ் ஆகியவை விருது வழங்கும் விழாவில் நேரடியாக வழங்கப்படும்.

### பதிவு செய்தல் :

விருதுக்குத் தேர்வு செய்யப்படுபவர்கள் பதிவுக் கட்டணம் செலுத்த வேண்டும். வாழ்நாள் சாதனையாளர் விருதுக்குத் தேர்ந் தெடுக்கப்படுபவர்கள் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவார்கள்.

**விண்ணப்பிக்க கடைசி நாள்: 15.12.2023**

### கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள்:

முனைவர் **பூ.மு.அன்பு சிவா**
ஜேப்பியார் பல்கலைக்கழகம், சென்னை

முனைவர் **ஜெ.சந்திரிகா**
முனைவர் **இரா. பிரந்தாவதி**
முனைவர் **கி. காவேரி**
ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி, சென்னை

முனைவர் **த.இராமையன்**
வேல் டெக் ரங்கராஜன் டாக்டர் சகுந்தலா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம், சென்னை

முனைவர் **ஆ.தர்மராஜன்** சென்னை
தூய தாமஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சென்னை

**மேலும் தகவல்களுக்கு:**
முனைவர் **தா.பால் தினகரன்**
**செல் : 9159447157**